**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| தரம் :- 12 (2019) | வணிகக்கல்வி | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

சுட்டெண் :..................................

- *எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.*
- *மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.*
- *01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- *16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- *ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.*

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

01) தேவைகளும் விருப்பங்களும் கீழே தரப்பட்டுள்ளன

A – உணவு B – பால் C – உடை D – பத்திரிகை

E – கல்வி F – பாதணி G – பாதுகாப்பு H – மருத்துவம்

மேலே தரப்பட்டவற்றுள் விருப்பங்களை மட்டும் உள்ளடங்கியுள்ள தொகுதி எது?

1) B, E, G, H 2) B, C, D, E 3) A, C, E, G 4) B, D, F, H 5) A, C, F, G (……...)

agaram.lk

02) முதனிலை உற்பத்தியை (Primary Production) மட்டும் உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.

1) விவசாயம் / காட்டுவளம் / மீன்பிடிக்கைத்தொழில் / நிர்மாணம்.
2) சுரங்கமறுத்தலும் கனிய அகழ்வும் / உற்பத்திகைத்தொழில் / நிர்மாணம் / மீன்பிடிக் கைத்தொழில்.
3) விவசாயம் / காட்டுவளம் / மீன்பிடிக்கைத்தொழில் / சுரங்கமறுத்தலும் கனிய அகழ்வும்.
4) உற்பத்திகைத்தொழில் / நிர்மாணம் / போக்குவரத்து / விடுதி வசதி.
5) விவசாயம் / மின்சாரமும் வாயுவும் / சுரங்கமறுத்தலும் கனிய அகழ்வும் / மீன்பிடிக் கைத்தொழில். (……...)

03) பின்வருவனவற்றுள் சேவையொன்றின் சிறப்பியல்பாக அமையாதது எது?

1) நீடித்துழைக்கும் தன்மை 2) தொட்டுணர முடியாத்தன்மை
3) பிரிக்க முடியாத தன்மை 4) வேறுபடும் தன்மை
5) களஞ்சியப்படுத்த முடியாமை (……...)

04) பின்வருவன வணிகத்தின் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய சில சூழல் சக்திகளாகும்

A – வாடிக்கையாளர்கள் B – சமூக கலாச்சாரக்காரணிகள்

C – போட்டியாளர்கள் D – வழங்குநர்கள்

E – பிரதியீட்டுப்பொருள் உற்பத்தியாளர்கள் F – தொழினுட்பக்காரணிகள்

மேலுள்ளவற்றுள் அண்மிய சூழல் சக்திகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

1) A, B, C, D 2) A, C, D, E 3) A, C, D, F 4) B, C, D, E 5) B, C, D, F (……...)

05) பின்வரும் அட்டவணையில் முறையே X நிரலானது வணிக வகைப்படுத்தலுக்கான சில அடிப்படைகளையும் Y நிரலானது அவ்வடிப்படைகளுடன் தொடர்புடையதான சில உதாரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. உரிமை | 1. இரத்தினக்கல் அகழ்வு |
| B. நோக்கம் | 2. அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம் |
| C. பருமன் | 3. இரத்தினக்கல் பட்டை தீட்டுதல் |
| D. தொழில் மூலம் | 4. இரத்தினக்கல் கைத்தொழிலுக்கான இலவச அறிவுரை |
| E. உற்பத்தியின் தன்மை | 5. இரண்டு ஊழியர்களுடனான இரத்தினக்கல் வணிகம் |

ஒவ்வொரு வணிக வகைப்படுத்தலுக்கான அடிப்படைகளும் பொருத்தமான உதாரணங்களுடன் சரியாகப் பொருந்தும் தொகுதியைத் தெரிவு செய்க.

1) A-2, B-5, C-3, D-4, E-1 2) A-2, B-4, C-5, D-1, E-3 3) A-2, B-3, C-4, D-1, E-5

4) A-1, B-3, C-2, D-5, E-4 5) A-4, B-2, C-5, D-1, E-3 (……...)

agaram.lk

06) "வணிகத்தின் சமூகப்பொறுப்பு" என்ற எண்ணக்கருவானது

1) வணிகமானது சட்டத்தின் பிரகாரம் தொழிற்பட வேண்டும் என்ற கருத்தாகும்.
2) வணிகமானது பங்குத்தாரரது குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்தாகும்.
3) வணிகமானது வினைத்திறனாகவும் நேர்மையாகவும் முகாமைத்துவ தீர்மானங்களை நிறைவேற்றல் என்ற கருத்தாகும்.
4) வணிகத்தினது தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அக்கறையுடைய தரப்பினருக்கு இயன்றளவில் நியாயமொன்று நிறைவேற்றக் கூடிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்ற கருத்தாகும்.
5) வணிகமானது தீர்மானங்களை மேற்கொள்ளும் போது வாடிக்கையாளரது தேவைகளையும் விருப்பங்களையும் கருத்திற்கொள்ள வேண்டும் என்ற கருத்தாகும். (……...)

07) பின்வருவன பல்வேறு வணிகங்களின் நன்மைகள் சிலவாகும்.

A – இலகுவில் ஆரம்பிக்க முடிதல். B – அதிகளவு மூலதனத்தைத் திரட்டிக் கொள்ள முடிதல்.

C – தீர்மானம் எடுத்தலில் சுயாதீனம் காணப்படல் D – உயர் மட்டத்தைச் சேர்ந்த மனித வளங்களை ஒன்று சேர்க்க முடிதல்.

E – வணிகத்தை கலைப்பது இலகுவாயிருத்தல் F – பொறுப்புக்கள் பலரிடையே பகிரப்படும்.

இவற்றுள் பங்குடமை வணிகமொன்றின் நன்மைகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதியை தெரிவு செய்க.

1) A, B, C 2) A, E, F 3) B, C, E 4) B, D, F 5) D, E, F (……...)

08) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்றில் மாத்திரம் காணக்கூடிய பண்பொன்றாக இருப்பது

1) பங்குகளை சுதந்திரமாகக் கைமாற்ற முடிதலும் உச்சப்பங்குதாரர் எண்ணிக்கை வரையறுக்கப்படாதிருத்தலும்.
2) நீண்ட வாழ்வுத் தன்மை காணப்படலும் வரையறுக்கப்பட்ட பொறுப்பும்
3) பங்குகளை சுதந்திரமாகக் கைமாற்ற முடியாதிருத்தலும் வரையறுக்கப்பட்ட பொறுப்பும்.
4) வரையறுக்கப்பட்ட பொறுப்பும் பங்குகளையோ அல்லது பிணைப்பத்திரங்களையோ பகிரங்கமாக வழங்க முடியாமையும்.
5) உச்சப்பங்குதாரர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருத்தலும், நீண்ட வாழ்வுத்தன்மையொன்று காணப்படலும். (……...)

09) அங்கீகார ஒப்பந்தத்திற்கேற்ப அங்கீகாரம் வழங்குபவரிடமிருந்து அங்கீகாரம் பெறுபவர் பெற்றுக் கொள்ள முடியாத வசதியினைத் தெரிவு செய்க.

1) தனது வியாபாரப் பெயரினைப் பயன்படுத்துவதற்கான அனுமதியினை வழங்கல்.
2) முகாமைத்துவ பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.
3) சந்தைப்படுத்தலுக்கான உதவியினை வழங்கல்.
4) உற்பத்திப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்கல்.
5) எந்தவொரு வழங்குநரிடமிருந்தும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கல். (……...)

agaram.lk

10) கூட்டுறவு அமைப்புடன் தொடர்புடைய சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – பல்வேறு துறைகளில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட முடிதல்

B – அங்கத்தவர்களின் சம உரிமை

C – அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு

D – இலாபத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டிருக்காமை

E – அங்கத்தவர் தொடர்பாக கவனம் செலுத்துதல்

F – பொதுத்தேவை எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கியதாக இருத்தல்.

மேலே தரப்பட்டவற்றுள் கூட்டுறவு வணிகத்தின் விசேட பண்புகளை மட்டும் உள்ளடங்கியுள்ள தொகுதி எது?

1) B, C, D 2) B, D, E 3) B, D, F 4) A, B, D, 5) D, E, F (……...)

11) ஒரே வகையிலான வணிகத்தில் ஈடுபட்டுள்ள கம்பனிகள் இரண்டு அல்லது பல கம்பனிகள் ஒன்றிணைதல்

1) நிலைக்குத்து இணைப்பு 2) கிடை இணைப்பு 3) வியாபார விரிவாக்க இணைப்பு
4) முரண்பாடான இணைப்பு 5) உற்பத்தி விரிவாக்கத்திற்கான இணைப்பு (……...)

12) முயற்சியாண்மையினூடாக கிடைக்கப்பெறும் சமூக பொருளாதார நன்மைகள்

1) இடர்களை ஏற்றலும், இலாபத்தை உச்சப்படுத்தலும்.
2) கடின உழைப்பும், வெற்றிகரமான முகாமைத்துவமும்.
3) முழுமையான அர்ப்பணிப்பும், வணிக வாய்ப்புக்களை இனம் காணலும்.
4) தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதலும், வாழ்க்கைத்தரம் உயர்வடைதலும்.
5) புதிய வியாபாரச்சந்தை அபிவிருத்தியும், தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தலும் (……...)

13) எது ஒரு முயற்சியாளனின் பண்பு அன்று

1) தன்னம்பிக்கையோடு வோலை செய்வது.
2) சூழல் மாற்றங்களை முன்கூட்டியே அறிந்து கொள்வது.
3) எந்த வகையான இடரையும் ஏற்றுக் கொள்வது.
4) புத்தாக்க கண்டுபிடிப்புக்களைச் செய்வது.
5) அர்ப்பணிப்புடன் வேலை செய்வது. (……...)

14) A – சட்டப்பணம் B – வங்கிப்பணம் C – கறுப்புப்பணம்
D – அண்மிய பணம் E – இலத்திரனியல் பணம் F – கடன் பணம்

மேற்குறிப்பிடப்பட்டவற்றுள் இலங்கையில் பயன்படுத்தப்படும் பண வகைகளை மட்டும் கொண்ட தொகுதியினைத் தெரிவு செய்க.

1) A, B, C மற்றும் D 2) A, B, D மற்றும் E 3) A, B, D மற்றும் F
4) B, C, D மற்றும் E 5) C, D, E மற்றும் F (……...)

15) A – கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் B – விசேட குத்தகை நிதிக்கம்பனிகள்
C – காப்புறுதிக்கம்பனிகள் D – முதன்நிலை வணிகர்கள்
E – நிதிக்கம்பனிகள் F – பங்குத்தரகர்கள்

மேலே குறிப்பிட்டவற்றுள் உள்ள விசேட நிதி நிறுவனங்களை உள்ளடக்கிய தொகுதியை தெரிவு செய்க.

1) A, B, C 2) B, C, D 3) D, E, F 4) C, D, F 5) B, D, F (……...)

agaram.lk

❖ **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

16) அ) …………….…………… மற்றும் ……………….……….…….. ஆகியோரைக் காணக் கூடியதும்தொடர்புகளைப் பேணுவதுமான ஏதேனும் ஒரு வடிவம் சந்தை எனப்படும்.

ஆ) ………………………………….…..…… மற்றும் ……………………………………….. என்பவற்றின் சேர்க்கை வர்த்தகம் எனப்படும்.

17) அ) வலையமைப்பினூடாகக் கொள்வனவு விற்பனை செய்தலுக்கு வழங்கும் பெயர் ……………………………………………………………. ஆகும்.

ஆ) வணிகம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட ஒழுக்க விழுமியத்தினை எழுத்து வடிவில் காட்டும் போது அது ………………………………………………………….. என்றழைக்கப்படும்.

18) அ) வரி வருமானங்களானது …………………………………… கீழ் வகைப்படுத்தப்படுவதுடன் விருத்திச் செலவுகள் …………….…………………… கீழ் வகைப்படுத்தப்படுகின்றன.

ஆ) முயற்சியாண்மையின் சில திறன்களாக (Skills) 1) ………………………………………..
2) ……………………………….……… 3) ………………………..……..………
4) ……………………………...………………. ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

19) அ) இலங்கைமத்தியவங்கியினது பிரதான நோக்கங்கள் இரண்டும் ………………..…………… ………………………………… உம் ………………………………………… உம் ஆகும்.

ஆ) இலங்கையிலுள்ள வங்கித்துறை நிதி நிறுவனங்கள் இரண்டாக …………………………… ………………… ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

20) பின்வரும் கூற்றுக்கள் தொடர்பில் சரி பிழையைக் குறிப்பிடுக.

| கூற்று | சரி / பிழை |
|---|---|
| 1) தனிநபர் சிறப்புத் தேர்ச்சியின் விளைவொன்றாக வியாபாரம் தோன்றியது. | ………………………… |
| 2) ஒரு பங்குடைமையானது உடன்படிக்கையொன்று இன்றி இருக்க முடியாது | ………………………… |
| 3) எந்தவொரு இடர்களையும் ஏற்றுக் கொள்ளுதல் முயற்சியாண்மையின் ஒரு குணவியல்பு ஆகும் | ………………………… |
| 4) தனியாளுரிமை வணிகமானது உரிமையாளரின் பெயரில் வருமான வரியைச் செலுத்துகின்றது | ………………………… |

❖ **21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடைகளை எழுதுக.**

21) அ) வணிகமொன்றின் பிரதான கருமங்கள் இரண்டினைப் பெயரிடுக.
1. ……………………………………………………………………………………………..
2. ……………………………………………………………………………………………..

ஆ) வணிகம் தொடர்பில் வாடிக்கையாளர்கள் அக்கறை காட்டுவதற்கான இரண்டு காரணங்களை எழுதுக.
1. ……………………………………………………………………………………………..
2. ……………………………………………………………………………………………..



agaram.lk

22) நிலை பேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக வணிகங்கள் செயற்படும் பொழுது விசேடமாக கவனம் செலுத்த வேண்டிய நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

3. ……………………………………………………………………………………………

4. ……………………………………………………………………………………………

23) பேரினச்சூழல் காரணியில் உள்ளடங்கும் பூகோளச் சூழலுக்கு நான்கு உதாரணம் தருக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

3. ……………………………………………………………………………………………

4. ……………………………………………………………………………………………

24) வணிகமொன்றினால் சமூகம் தொடர்பாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கள் நான்கைக் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

3. ……………………………………………………………………………………………

4. ……………………………………………………………………………………………

agaram.lk

25) இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களுக்காக அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற நிதிசார்ந்த ஊக்குவிப்புக்களின் நான்கு வகைகளைக் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

3. ……………………………………………………………………………………………

4. ……………………………………………………………………………………………

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| தரம் :- 12 (2019) | வணிகக்கல்வி | |
|---|---|---|

### பகுதி II

❖ **அறிவுறுத்தல்கள்**

**ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி - I

*01.*

i) வணிகப் பரம்பலின் முக்கியமான சந்தர்ப்பங்களை பெயரிட்டு விபரிக்குக. *(2 புள்ளிகள்)*

ii) வணிகங்களுக்கு பல்வேறு நோக்கங்கள் காணப்பட முடியும். அவற்றில் நான்கு நோக்கங்களை குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

iii) கைத்தொழில் புரட்சியின் விளைவாக வியாபாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களைச் சுருக்கமாக விளக்குக. *(2 புள்ளிகள்)*

iv) வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களைக் குறிப்பிட்டு அப்பிரிவினர் வணிகத்திற்கு எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றனர் என்பதனை விபரிக்குக. *(2 புள்ளிகள்)*

v) மனிதத் தேவைகளை நிறைவு செய்தல் தொடர்பாக ஆதிகாலத்தையும் தற்காலத்தையும் ஒப்பிடுவதன் மூலம் அவற்றுக்கிடையிலான நான்கு வேறுபாடுகளை எழுதுக. *(2 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

*02.*

i) நிறுவனக் கலாசாரத்தின் பலம், பலவீனம் ஆகியவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருவதன் மூலம் விளக்குக. *(2 புள்ளிகள்)*

ii) அதிகரித்த வணிகப்போட்டி காரணமாக வணிக கருமங்களின் பாதகமான தாக்கங்கள் நான்கை விளக்குக. *(2 புள்ளிகள்)*

iii) அரசின் இறைக்கொள்கையானது வணிகங்களின் மீது எவ்வாறான தாக்கத்தை செலுத்தும் என்பதனை விபரிக்குக. *(2 புள்ளிகள்)*

iv) நுகர்வோர் பாதுகாப்பினால் நுகர்வோருக்கும், வணிகர்களுக்கும் கிடைக்கும் அனுகூலங்களை வெவ்வேறாக பட்டியலிடுக. *(2 புள்ளிகள்)*

v) தனியாளுரிமை வணிகத்தை மிகவும் பிரபல்யமான வணிக நிறுவன அமைப்பாக்குகின்ற நான்கு பிரதான காரணிகளைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

agaram.lk

03.

i) ஒரு தனியாளுரிமை வணிகம் எப்போது பதிவு செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது?
இது எச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும். (2 புள்ளிகள்)

ii) பங்குடைமை வணிகமொன்றின் விசேட பண்புகளைப் பட்டியல் படுத்துக. (2 புள்ளிகள்)

iii) 1890ம் ஆண்டு பங்குடைமை கட்டளைச் சட்டத்தின் 24ம் பிரிவு பிரயோகிக்கப்படும் இரண்டு சந்தர்ப்பங்களும் எவை? (2 புள்ளிகள்)

iv) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றை வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியில் இருந்து கீழ் காட்டப்படும் நியதிகளின் அடிப்படையில் ஒப்பிட்டுக் காட்டுக.

1. அங்கத்தவர்களின் எண்ணிக்கை
2. மூலதனம் இடல்
3. நிர்வாகம் முகாமை
4. பொறுப்பு (2 புள்ளிகள்)

v) "தனியாளுரிமை வணிகர்களும் சில சட்ட நடைமுறைகளை நிறைவேற்றும்படி வேண்டப் படுகின்றனர்." நான்கு உதாரணங்களைத்தந்து இக்கூற்றை ஆதரிக்குக. (2 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

04.

i) 1995 ஆம் ஆண்டில் மன்செஸ்டர்மா நாட்டில் பிரகடனப்படுத்தப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகளைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) போட்டியை எதிர் கொள்ளும் பொருட்டு இலங்கையில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை முன்னேற்ற எவ் ஆலோசனைகளைத் தெரிவிப்பீர். (2 புள்ளிகள்)

iii) அங்கீகார வணிகம் (FRANCHISES) மூலம் அங்கீகாரம் வழங்குபவரும், அங்கீகாரம் பெறுபவரும் அடைந்து கொள்ளும் அனுகூலங்களைத் தனித்தனியாகக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

agaram.lk

iv) "வணிகங்கள் இணைந்து செயற்படல் வணிகத்துறையின் புதிய போக்கொன்றாகும்.
அ) வணிகங்கள் ஒன்றிணைதல் என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ) ஒன்றிணைதலில் எதிர்பார்க்கும் இரண்டு நோக்கங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

v) ஒன்றிணைதல் இரு முறைகளில் மேற்கொள்ள முடியும் விபரிக்குக. (2 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

05.

i) பொதுத்துறையின் மூலம் வணிகங்களை நடத்திச் செல்வதற்கான காரணங்களை விளக்குக. (2 புள்ளிகள்)

ii) சில வணிக நிறுவனங்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- வரையறுக்கப்பட்ட பிரியா கம்பனி
- சில்வாவும் சகோதரர்களும்
- இலங்கை புகையிரத திணைக்களம்
- இலங்கை மின்சார சபை

அ) மேற்காட்டிய ஒவ்வொரு நிறுவனத்திற்குரிய வணிக அமைப்பு வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
ஆ) மேற்காட்டிய வணிக நிறுவனங்களின் சட்ட ரீதியான தனிமனித அந்தஸ்துடன் கூடிய வணிக நிறுவனங்கள் எவையெனக் கூறுக. (2 புள்ளிகள்)

iii) முயற்சியாண்மைக்குரிய செயன்முறையின் படிமுறைகளை ஒழுங்கு முறையாக எழுதுக. *(2 புள்ளிகள்)*

iv) முயற்சியாண்மைப் பண்புகள் இரண்டைக் குறிப்பிட்டு விபரிக்குக. *(2 புள்ளிகள்)*

v) "பெருமளவிலான சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் மிகவும் குறுகிய காலத்தில் தோல்வியடைகின்றன" சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் தோல்வியடைவதற்கான காரணங்களைத் தருவதன் மூலம் இக்கருத்தை விளக்குக. *(2 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

*06.*

i) "சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களின் வெற்றிக்கு முயற்சியாண்மை அத்தியாவசியமானதாகும்" இக்கருத்தை காரணங்கள் தந்து நியாயப்படுத்துக.

*(2 புள்ளிகள்)*

ii) நல்ல பணத்தின் நான்கு பிரதான பண்புகளைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

iii) இலங்கையில் செயற்படும் பல்வேறு நிதி நிறுவன வகைகள் யாவை? *(2 புள்ளிகள்)*

iv) இலங்கையில் வியாபாரிகளுக்கிடையில் குத்தகை பிரபல்யம் அடைவதற்கான காரணங்கள் என்ன? *(2 புள்ளிகள்)*

v) இலங்கை மத்திய வங்கியின் நான்கு தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

agaram.lk